செய்தி வெளியீடு எண்:566 நாள்:05.08.2021

<u>**செய்தி வெளியீடு**</u>

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் இன்று **(05.08.2021)** சென்னையில் தகவல் பாதுகாப்பு அலுவலர்களுக்கான சைபர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில், தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் (ICT) மூலம் இணையம் நமது செயல்பாடுகள் மற்றும் வாழ்வியல் முறையை மாற்றியுள்ளதை நாம் அனைவரும் அறிந்துள்ளோம். தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உள்ளார்ந்த சமூக பொருளாதார வளர்ச்சியை அடைவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. இதன் மூலம் நாம் வேலைவாய்ப்பினை உருவாக்கியுள்ளதுடன் வணிக சூழலையும் மேம்படுத்தியுள்ளோம். மேலும் மின் சுற்றலை புகுத்தியதுடன் குடிமக்களுக்கான பெரும்பாலான அரசு சேவைகளையும் இணையவழியில் வழங்கி வருகிறோம்.

நமது அனைத்து செயல்பாடுகளையும் தானியங்குபடுத்தி இணைய வழியில் சேவைகளை வழங்கியுள்ளதுடன், அவற்றின் நம்பகத்தன்மை மற்றும் பாதுகாப்பிலும் கவனம் செலுத்தி வருகிறோம், COVID-19 தொற்று பரவும் இந்த நேரத்தில், ஒவ்வொரு நாளும் தரவு திருட்டு மற்றும் பாதுகாப்பு மீறல்கள் பற்றிய செய்திகள் வருகிறது. எனவே, மாநிலத்தில் ஒரு தகவல் பாதுகாப்பு சுற்றுச்சூழல் அமைப்பை செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தை இது நமக்கு உணர்த்துகிறது.

அரசு மற்றும் பொதுத் தரவுகளைப் பாதுகாக்கவும், மாநிலத்தின் முக்கியமான தகவல் உள்கட்டமைப்புகளைப் (CII) பாதுகாத்திடவும், ஒரு ‘‘சைபர் பாதுகாப்பு கட்டமைப்பு – தமிழ்நாடு (CSA-TN)’’ தகவல் தொழில்நுட்பவியல் துறையால், Elcot மற்றும் சென்னை, சி–டாக் நிறுவனங்கள் வழியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு தகவல் உள்கட்டமைப்பைப் பாதுகாப்பதன் மூலம், நெருக்கடி ஏற்படும் சூழலில் துறையின் இணையவழி செயல்பாடுகளுக்கு குறைந்தபட்ச பாதிப்பு அல்லது பாதிப்பு இல்லாமல் தொடர்ந்து செயல்படுவது உறுதி செய்யப்படுகிறது.

சைபர் பாதுகாப்பு கட்டமைப்பு – தமிழ்நாடு (CSA-TN) திட்டத்தின் ஒரு பகுதியாக, மாநிலத்தில் ஒரு “சைபர் நெருக்கடி மேலாண்மை திட்டம் (Cyber Crisis Management Plan)” உருவாக்கப்படுவதுடன், 24/7 இயங்கும் விதத்தில் “தமிழ்நாடு பாதுகாப்பு இயக்க மையம் (Security Operation Center TN)” ஒன்று சென்னை பெருங்குடி Elcot–ன் மாநிலத் தரவு மையத்தில் (Tamil Nadu State Data Centre) C-DAC நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளது.

ஏற்கனவே 36 செயலகத் துறைகளில் இருந்து பரிந்துரைக்கப்பட்ட “முதன்மை தகவல் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு (Chief Information Security Officers - CISO)” சைபர் பாதுகாப்பு குறித்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று Elcot மற்றும் C-DAC ஆகியவை இணைந்து, “துறைசார் தகவல் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு (Information Security Officers – ISOs) சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி வழங்கும் திட்டத்தை இன்று தொடங்கி வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தகவல் பாதுகாப்பு அதிகாரிகள், தமது துறைக்கும் தமிழ்நாடு பாதுகாப்பு இயக்க மைய ஊழியர்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருப்பார்கள். எனவே, துறைசார் தகவல் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அளிக்கப்படும் இந்த விழிப்புணர்வு பயிற்சி அவர்களின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில், தகவல் தொழில் நுட்பவியல் துறை முதன்மைச் செயலர் திரு. நீரஜ் மித்தல், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்னணுவியல் கழக மேலாண்மை இயக்குநர் திரு. அஜய் யாதவ், இ.ஆ.ப., சி–டாக் சென்னை நிறுவனத்தின் இயக்குநர் கமாண்டர் L.R. பிரகாஷ் (ஓய்வு), தமிழ்நாடு இ. ஆளுமை நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலர் திரு. கமல்கிஷோர், இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9